இதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு மாதிரிச் சிலைகள் சிற்பக்கூடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகிறது.

(உ) அரசுக்கு இதில் நேரடித் தொடர்பு இல்லை. ஆகவே, அரசாங்கம் நேரடியாக நடவடிக்கை எடுப்பதற்கில்லை. ஆனால் அதற்கு உரியவர்களிடத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

Training in the art of Sculpture

* 63 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the total number of trainees in Sculpturing who have come out of the Training Institute, run by the Directorate of Industries and Commerce during the last three years; and

(*b*) the number of them who have been placed in employment?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பதினெட்டு

(ஆ) இந்த பதினெட்டு நபர்களும் பணியில் அமர்ந்துள்ளனர்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அவர்கள் அரசுப் பணிகளில்தான் அமர்த்தப்படுகிறார்களா ? தனியார் துறையிலும் வாய்ப்பிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசுப் பணியில் சிலயிடங்களில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் தனியாக சிலபலயிடங்களில் சிற்பக் கூடங்கள் அமைத்துத் தொழில் நடத்தி வருகிறார்கள்.

Pichavaram as tourist centre

* 64 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to develop Pichavaram near Chidambaram into a Tourist Centre; and

(*b*) if so, the details thereof?

1974 சனவரி 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

வந்தவாசியில் சுற்றுலா மாளிகை

*65 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சரித்திரப் பிரசித்தி பெற்ற வந்தவாசி கோட்டையைக் காணவரும் உல்லாசப் பயணிகள் வசதிக்கென அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வந்தவாசி சரித்திரத்தில் மிகவும் புகழ்பெற்ற இடம். அங்கே ஒரு பாழடைந்த கோட்டை இருக்கிறது. தெள்ளாறு என்ற இடத்தில் பல்லவன் காலத்து குகைக்கோயில் இருக்கிறது. எனவே அங்கு வரும் பயணிகளுக்கு வசதியாக சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு இனியாவது முயற்சிப் பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வந்தவாசியில் கோட்டையின் பழமையையும், வரலாற்றுச் சிறப் பான பகுதிகளையும் காப்பாற்றுவதில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் சுற்றுலா மாளிகை கட்டும் அளவிற்கு இன்றியமையாமை ஏற்படுகிறதா என்று பார்க்கும்பொழுது வரும் பயணிகள் அங்கே தங்குகிறார்களா அல்லது நின்று பார்க்கிறார்களா அல்லது ஓட்டத்திலேயே பார்க்கிறார்களா என்ற அடிப்படையில் சுற்றுலா மாளிகை ஏற்படும். திருச்செந்தூருக்கு ஏராளமான பேர் வருகிறார்கள் என்றால், சுற்றுலா மாளிகை கட்டி போதுமான அளவில் யாரும் தங்காத அளவிற்கு அங்கே ஏன் கட்டினோம், திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலே கட்டியிருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே வந்து தங்கும் பயணிகள், இருக்கின்ற நேரம் ஆகியவைகளைக் கொண்டு கட்ட வேண்டியவர்களாக